# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1181**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

**168**

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...



# தூத்துக்குடி உயர் சிறப்பு மருத்துவமனை!

## நல்வாழ்வுக்கான அரசின் சாட்சி!

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்ற 2021-ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்த எடுத்த முயற்சிகள் ஏராளம்.

புதிய மருத்துவமனைகள் அமைப்பது, ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருக்கும் மருத்துவமனைகளை மேம்படுத்தி, புதிய வசதியான கட்டடங்களில் செயல்பட வைப்பது எனத் தமிழ்நாடு முழுவதும் பல நகரங்களில் செயல்படுத்தினார்.

கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை, நீலகிரி மலைப்பகுதி உயர் சிறப்பு மருத்துவமனை, வேலூர் பென்ட்லேண்ட் உயர் சிறப்பு மருத்துவமனை எனப் புதிதாக உருவான மருத்துவமனை வரிசையில் கட்டப்பட்டதுதான் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் கட்டப்பட்ட உயர் சிறப்பு மருத்துவமனை.

ரூ.136 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட இந்த மருத்துவமனை கட்டடத்தை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 7.3.2026 அன்று திறந்து வைத்து, தூத்துக்குடி மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தார்.

### அரசு மருத்துவக் கல்லூரியாக...

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையானது 1952-ஆம் ஆண்டில், தூத்துக்குடி வட்ட அரசு மருத்துவமனையாக நிறுவப்பட்டது. 1986-ஆம் ஆண்டு மாவட்டத் தலைமை மருத்துவமனையாக மேம்படுத்தப்பட்டு, பின்னர், 2000-ஆம் ஆண்டில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக உயர்த்தப்பட்டது.

முதலில் 100 எம்.பி.பி.எஸ். மாணவர்கள் சேர்க்கையுடன் தொடங்கப்பட்ட இந்த மருத்துவக் கல்லூரியில், தற்போது ஆண்டுக்கு 150 எம்.பி.பி.எஸ், முதுநிலை படிப்புகள், நர்சிங் மற்றும் மருத்துவம் சார்ந்த பல படிப்புகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. மாவட்டத்தில் மருத்துவக் கல்வி மற்றும் சுகாதார சேவைகளில் முக்கிய மையமாக வளர்ந்து உள்ளது.

தினமும் சுமார் 2,500 முதல் 2,600 வரை வெளிநோயாளிகள் மற்றும் 900 முதல் 1,100 வரை உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். தினமும் 40 முதல் 50 பெரிய அறுவைசிகிச்சைகள் மற்றும் 60 முதல் 70 சிறிய அறுவைசிகிச்சைகள் நடைபெறுகின்றன.

LaQshya Platinum சான்றளிக்கப்பட்ட இத்துறையில் பிரசவ கால (intrapartum) மற்றும் பிரசவத்துக்குப் பிறகு, பராமரிப்பில் (Post partum) உயர்தர சேவைகள் வழங்கப்படுகின்றன.



மகப்பேறு பிரிவில் தினசரி சுமார் 120-150 கர்ப்பகால பரிசோதனைகளும் நடைபெறுகின்றன. மகளிர் வெளிநோயாளி பிரிவில் தினசரி 70 முதல் 80 மருத்துவப் பயனாளர்கள் பயன்பெறுவதுடன், ஆண்டுக்கு சுமார் 4,800 முதல் 5,000 மகப்பேறு வரை நடைபெறுகின்றன.

இந்த சேவைகளை மேம்படுத்தத் திட்டமிட்ட நம் அரசு, 2024-ஆம் ஆண்டில் புதிய கட்டடப் பணிகளைத் தொடங்கியது. குறிப்பாக மகளிர், தாய்மார்கள் மற்றும் குழந்தை ஆரோக்கியத்திற்காக தனிச்சிறப்பான கட்டடமாக இருக்கும் வகையில் உருவாக்கப் பட்ட இந்த மருத்துவமனையை 7.3.2026 அன்று திறந்து வைத்து பார்வையிட்டார் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் 7 தளங்களுடன் 3,21,108 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட உயர் சிறப்பு மருத்துவமனை கட்டடம், 687 படுக்கை வசதிகள் கொண்டுள்ளது.

### குழந்தைகள் சிறப்புப் பிரிவு

புதிய கட்டடத்தில் அவசர மற்றும் கர்ப்பப் பரிசோதனை சேவைகள் (Antenatal Checkups), பிரசவ வார்டுகள் (Labour Wards), HDU, Obstetric ICU, Emergency OT, பிரசவத்துக்குப் பிறகு, பராமரிப்பு சேவைகள் வழங்கப்படுகின்றன. மேலும், குழந்தையின்மைக்கான தனிப்பிரிவும் (Infertility Clinic) மற்றும் கருப்பை கருஉட்செலுத்துதல் (IUI) சேவைகளைத் தொடங்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

குழந்தைகள் மருத்துவப் பிரிவு 145 சிறப்பு படுக்கைகளைக் கொண்டது. இதில் சிசு அவசரசிகிச்சைப் பிரிவு (NICU), குழந்தைகள் அவசர சிகிச்சைப் பிரிவு (PICU), PREM யூனிட் மற்றும் 90 படுக்கைகள் கொண்ட பொதுவான வார்டுகள் (Paediatric ward) உள்ளன. இப்பிரிவில் தாய்சேய் பராமரிப்பு யூனிட் (Mother-Newborn care Unit), தாய்ப்பால் வங்கி மற்றும் தடுப்பூசி சேவைகள் உள்ளன.

குழந்தைகள் அறுவைசிகிச்சைத் துறை - 30 படுக்கைகளுடன் தனிச்சிறப்பாக ஆண் மற்றும் பெண் குழந்தைகளுக்கென தனித்தனி வார்டுகள் உள்ளன. நான்கு படுக்கைகள் கொண்ட அறுவைசிகிச்சைக்குப் பின் கவனிக்கப்படும் வார்டும், குழந்தைகளுக்கான உயர்தர மருத்துவ உபகரணங்கள் கொண்ட இரண்டு அறுவைசிகிச்சை அரங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

687 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவ மனை, 4.1 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. மொத்த செலவில், கட்டட மற்றும் மின்சாரப் பணிகளுக்காக ரூ.118.35 கோடியும், மருத்துவ உபகரணங்களுக்காக ரூ.16 கோடியும், தளவாடங் களுக்காக ரூ. 2 கோடியும் ஒதுக்கப்பட்டு, தூத்துக்குடி மக்களின் எதிர்பார்ப்பாக இருந்த இந்த உயர் சிறப்பு மருத்துவமனை உருவாகி யுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்களின் நலவாழ்வு உறுதி செய்யும் வகையில் திராவிட மாடல் 2.0 செயல்படும் என்பதற்கு இந்த செயல்பாடுகளே சாட்சி!



> **ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்களின் நலவாழ்வு உறுதி செய்யும் வகையில் திராவிட மாடல் 2.0 செயல்படும் என்பதற்கு இந்த செயல்பாடுகளே சாட்சி!**

...சாதனை தொடரும்

## மக்களின் ஒற்றுமை முறியடிக்கும்!

பெங்களூருவில், சில நாட்களுக்கு முன்னர் ஒரு பல்கலைக் கழகத்தில், வகுப்பு நேரத்தில் இஸ்லாமிய மாணவர் ஒருவரை 'தீவிரவாதி' என்று திட்டி, மத ரீதியான வெறுப்புக் கருத்துகளை வெளிப்படுத்தினார் ஒரு பேராசிரியர்.

அந்த சம்பவத்தின் வீடியோ காட்சி வெளியாகி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியதுடன், மாநிலம் முழுவதும் எழுந்த கண்டனங்களால் சம்பந்தப்பட்ட பேராசிரியர் இடைநீக்கம் செய்யப்பட்டார்.

அதேபோன்று சமீபத்தில் மீண்டும் ஒரு சம்பவம் அரங்கேறி கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அடுக்குமாடி குடியிருப்புக்கு புதிதாக வந்த வடமாநிலத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரி ஒருவர், அண்டை வீட்டில் வசித்து வந்த இஸ்லாமிய குடும்பத்தை தீவிரவாதி என்றும் பாகிஸ்தானி என்றும் வெறுப்பை உமிழ்ந்த விவகாரம் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவரது இந்த வெறுப்புப் பேச்சால் கோபமடைந்த சக குடியிருப்பு வாசிகள் அந்த ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரி வீட்டை முற்றுகையிட்டு கேள்வி எழுப்பியதுடன் அவரை மன்னிப்புக் கேட்கவும் வைத்துள்ளனர்.

ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரி வெளிப்படுத்திய அந்த வெறுப்புப் பேச்சு, பல்கலைக்கழகப் பேராசிரியரின் வெறுப்புப் பேச்சு ஆகியவை சமூக நல்லிணக்கத்தை, மக்களின் இயல்பு வாழ்க்கையை சீர்குலைக் கூடியது என சமூக வலைதளங்களில் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

பெங்களூரு போன்ற தொழில்நகரங்களில் மதவாத வெறுப்புப் பேச்சுகள் அச்சுறுத்தலாக உருவாகி தொழில்துறை பாதிப்புகளையும் உருவாக்கும் என எச்சரிக்கை செய்கின்றனர். வட மாநிலங்களின் சமூக ஒற்றுமைக்கும், வளர்ச்சிக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் சங்பரிவார் விதைக்கும் மதவெறி போக்கு தென்மாநிலங்களில் பரவுவது மக்களின் ஒற்றுமையால் முறியடிக்கப்படும். அதற்கு இந்த சம்பவங்களும் சமீபத்திய உதாரணங்கள்.

## ஃப்ளாஷ்பேக்



### தஞ்சாவூர் எங்கள் மாவட்டம்!



யோகம் செழியன்

1993-ஆம் ஆண்டு, கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்திக்கச் சென்றபோது, என்னையும் அழைத்துச் சென்று கலைஞரிடம் அறிமுகப்படுத்தினார். "இவர் என் அன்புத் தம்பி தஞ்சாவூர் செழியன் என்றவுடன், 'தஞ்சாவூர் எங்கள் மாவட்டம்' " என்று அகமகிழ்ந்து புன்னகை பூத்தார் கலைஞர். அப்போது, "தஞ்சாவூர் திலகர் திடலில் என் திரையிசைப் பாடல்கள் நூல் வெளியீட்டு விழாவை நடத்தியவர்" என்றார் கவிப்பேரரசு. அந்த மகிழ்வான தருணத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படம். அவ்வப்போது நினைவில் வந்து ஊக்கம் தரும்.

**- யோகம் செழியன்,**
**மாநிலத் துணை பொதுச் செயலாளர்,**
**வெற்றித் தமிழர் பேரவை,**
**தஞ்சாவூர்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### பேரறிஞர் அண்ணா வழங்கிய பதில்!

1963-ஆம் ஆண்டு பிரிவினைத் தடைச் சட்டத்தின் மீதான விவாதம் மாநிலங்களவையில் நடைபெற்றது. அவைக்குத் தலைமை வகித்த டாக்டர் ராதாகிருஷ்ணன், "இந்தியா முழுவதும் ஒரே நாடு என்பதற்கு கன்னியா குமரியில் இருந்து காஷ்மீர் வரை ராமனையும், கிருஷ்ணரையும் தொழுவது ஒன்றே போதும்" என்றார். "ஏசுவை ஐரோப்பா முழுவதும் தொழுகிறார்கள். ஆனாலும், அங்கே பல நாடுகள் இருக்கின்றன" எனப் பதிலளித்தார் பேரறிஞர் அண்ணா.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900